# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2019.11.20 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்)

**2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 17.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன்பற்றிய கூற்று***

***வாசகம் 2*** : *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச்சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குறித்த சில பொருட்கள் அல்லது பண்டங்களின் இறக்குமதி ஏற்புடையதான சேவை வரியை மீளாய்வு செய்வதாகும்.*

***வாசகம் 3*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கான விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 4*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கான விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 5*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, "விநியோகித்தல்" மற்றும் "உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்னும் சொற்பதங்களுக்கான வரைவிலக்கணங்களைத் திருத்துவதாகும்.*

**பொருளாதாரச் சேவை விதிப்பனவு**
**(திருத்தம்)**

*ச.வ. – ஒ. 16/2019*

## *2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** (1) இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் பிரிவுகளின் ஏற்பாடுகள் 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியிலிருந்து பயனுறும் வகையில் வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, சட்டத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் ) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''அத்தகைய ஆளினதான அல்லது பங்காண்மையினதான,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இத்திருத்தச் சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது தொடங்குவதற்கு முன்னர் அத்தகைய ஆளினதான அல்லது பங்காண்மையினதான,'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், ''இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன் பின்னர்,'' என்னும் சொற்களுக்குப்

பதிலாக, "2018, ஒற்றோபர் 4 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் இத்திருத்தச் சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர்," என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்: -

"(ஈ) இத்திருத்தச் சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன் பின்னர் அமைச்சரினால் விதித்துரைக்கப்படும் ஏதேனும் பொருள் அல்லது பண்டம் தவிர்ந்த, ஏதேனும் பொருள் அல்லது பண்டத்தின் இறக்குமதிகளின் அனுப்பு பொருள் ஒவ்வொன்று தொடர்பிலும் கூட்டுமொத்த கிரயம் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் சுங்க இறக்குமதித் தீர்வைத் தொகையுடன் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் சான்று படுத்தப்பட்ட காப்புறுதி மற்றும் கேள்வு (சி.ஐ.எப்.) பெறுமதி, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற் பாலதான விசேட வியாபாரப்பண்ட அறவீடு, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான மதுவரி, 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வீதவரி மற்றும் 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுத் தொகைமீதும்,"; அத்துடன்

(ஈ) அவ்வுட்பிரிவிற்கான காப்புவாசகத்தில், "ஆனால் 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "ஆனால் 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் அத்துடன் 2019, ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்புவாசகம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது: -

(அ) அதன் (ஆ) என்னும் பந்தியில், "கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கருதப்படுதல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (இ) என்னும் பந்தியில், "எனக் கருதப் படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எனக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலமும்:-

"(ஈ) தேயிலை உற்பத்தி அலுவலைக் கொண்டு நடாத்துகின்ற தேயிலை தொழிற்சாலை சொந்தக்காரர் எனும் விடயத்தில், தேயிலை தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை விற்பனையின் வருவாயிலிருந்து பச்சைத் தேயிலை இலையை விநியோகித்த வர்களான தேயிலை சிறுபற்று நிலங்கள் வைத்திருப்பவர்களுக்குச் செலுத்தப்பட்ட வருவாயின் பங்கு அத்தகைய தேயிலை தொழிற்சாலைச் சொந்தக்காரரின் மொத்தவிற்பனை வரவின் பாகமாக அமையாது எனக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், "அத்தகைய காலாண்டு 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அத்தகைய காலாண்டு 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "முடிவுற்ற பின்னர், செய்யப்படுதலாகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முடிவுற்றபின்னர்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) ஏழாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் தேதிகளில் அல்லது தேதிகளிற்கு முன்னர் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் ஏதேனும் இயைபான காலாண்டிற்கென விபரத்திரட்டொன்றைச் செய்துள்ள ஆளொருவர் அல்லது பங்காண்மை ஒன்று, அவரது அல்லது அதனது வருமானத்திரட்டை 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 93 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டிருப்பின், எந்த உடனடுத்துறுகின்ற வரிமதிப்பீட்டாண்டினுள் அத்தகைய இயைபான காலாண்டு வருகின்றதோ அந்த உடனடுத்துறுகின்ற வரிமதிப்பீட்டாண்டின் நவெம்பர் முப்பதாம் தேதியிலிருந்து, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 135 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கு அமைவாக, முப்பது மாதங்கள் முடிவுற்ற பின்னர்;

(ஈ) பந்தி (இ) இல் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக அத்தகைய தேதியன்று அல்லது அதற்குமுன்னர் விபரத்திரட்டொன்றை ஆக்கத்தவறியுள்ள

ஆளொருவர் அல்லது பங்காண்மை ஒன்று எந்தத் தேதியில் வரிமதிப்பீட்டு அறிவித்தல் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 133 அல்லது 134 ஆம் பிரிவின் நியதிகளின்படி வரி செலுத்துனருக்கு சேர்ப்பிக் கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து (2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணடாட்டரசிறைச் சட்டத்தின் 135 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கு அமைவாக) முப்பது மாதங்கள் கொண்ட காலப்பகுதி ஒன்று முடிவுற்ற பின்னர்,

செய்யப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயங்கள் XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX மற்றும் XXXI என்பவற்றின் ஏற்பாடுகள்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் இயைபான காலாண்டுக்காக அல்லது வரிமதிப்பீட்டாண்டுக்காக 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயங்கள் XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX மற்றும் XXXI என்பவற்றின் ஏற்பாடுகள்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன்மூலமும்:-

''(2) முறையே நிர்வாக ஏற்பாடுகள், பதிவேட்டை வைத்திருத்தல் மற்றும் தகவலை சேகரித்தல், வரிமதிப்பீடு கள், ஆட்சேபனை மற்றும் மேன்முறையீடுகள், வரிக்கான பொறுப்பு மற்றும் வரிக்கான கொடுப்பனவு, வரி அறவீடு, தண்டங்கள், குற்றவியல் நடவடிக்கை முறைகள், ஒழுங்கு விதிகள் மற்றும் பொருள்கோடல் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் இயைபான வரிமதிப்பீட்டாண்

டுக்காக, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாங்கள் IX, X, XII, XIII, XIV, XVI, XVII, XVIII, XIX மற்றும் XX என்பவற்றின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் முறையே இச்சட்டத்தின்கீழான நிருவாக ஏற்பாடுகள், பதிவேட்டை வைத்திருத்தல் மற்றும் தகவல் சேகரித்தல், வரிமதிப்பீடுகள், ஆட்சேபனை மற்றும் மேன்முறையீடுகள், வரிக்கான பொறுப்பு மற்றும் வரிக்கொடுப்பனவு வரி அறவீடு, தண்டங்கள், குற்றவியல் நடவடிக்கை முறைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் பொருள்கோடல் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "விநியோகத்தர்" என்னும் சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

""விநியோகத்தர்" என்பது, இலங்கையில் எவையேனும் பண்டங்களின் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளர் அல்லது இறக்குமதியாளர் தொடர்பில் அத்தகைய பண்டங்களை அத்தகைய உற்பத்தியாளரால் அல்லது தயாரிப்பாளரால் அல்லது இறக்குமதியாளரால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வகையில் மொத்த விற்பனைச் சந்தையில் விற்பனை செய்வதற்காக இலங்கைக்கான அத்தகைய உற்பத்தியாளரால் அல்லது தயாரிப்பாளரால் அல்லது இறக்குமதியாளரால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்காண்மை எனப் பொருள்படும்;";

(2) "உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்னும் சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

" "உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்பது, விடயத்திற்கேற்ப 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் அல்லது வருமானத்திற்கான வரிவிதிப்பதற்கு ஏற்பாடு செய்யும் ஏதேனும் பின்னுறும் சட்டம் எனப் பொருள்படும்;".

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.